V.—GOVERNMENT BILL.

THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 ".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VI.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965–66—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளைச் சபைமுன் சமர்ப்பிக்கிறேன். இது பற்றிப் பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்த மதிப்பு 19 கோடியே 73 லட்சம் ரூபாயாகும். ஆயினும், இதில் 3 கோடியே 10 லட்சம் ரூபாய் மட்டும் ரெவின்யூக் கணக்கிலும், எஞ்சிய 16 கோடியே 63 லட்சம் ரூபாய் மூலதனக் கணக்கிலும் கடன் கணக்கிலும் அடங்கும்.

இத் துணைமதிப்பீடுகளில் ரெவினியூக் கணக்கில் அடங்கும் கூடுதல் செலவில் பெரும் பகுதி, கடந்த மாத இறுதியில் நமது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி விதங்களின் உயர்வினைக் குறிக்கிறது. இந்த உயர்ந்த விதங்கள் 1965 ஆகஸ்டு 1-ம் தேதியன்று கொடுக்கப்படுகிற ஜூலை மாதச் சம்பளத்திலிருந்து அமுலுக்கு வருகின்றன. இதன் மூலம் நமது அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படி விதங்கள், இந்திய அரசாங்கத்தில் நிகரான பதவிகளில் பணியாற்றும் ஊழியர்களுடைய அகவிலைப்படி விதங்களை ஒத்திருக்கும். மற்றும் 90 ரூபாய் முதல் 109 ரூபாய் வரையில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், இந்த அகவிலைப் படி விதங்கள் மத்திய அரசாங்க விதங்களைவிடச் சற்று கூடுதலாகவே இருக்கும். இந்த உயர்ந்த விதங்கள் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், அரசாங்க மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் முன்போலவே பொருந்தும். இந்த அகவிலைப்படி உயர்வினை, ஆண்டொன்றுக்கு 3 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவிற்காக " 71. பல்வகை இனங்கள் " என்கிற தலைப்பின் கீழ் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாளடைவில் இந்த நிதி ஒதுக்கத்திற்குப் பதிலாக, 1965-66-ம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளைத் தீர்மானமாக முடிவு